**மார்ச் – 27**

# TNPSC துளிகள்

- ஒரு முன்னாள் சர்வதேச நீச்சல் வீராங்கனையான ஜிம்பாப்வே நாட்டினைச் சேர்ந்த கிறிஸ்டி கோவென்ட்ரி, சர்வதேச ஒலிம்பிக் குழுவின் 130 ஆண்டு கால வரலாற்றில் அதன் தலைவராகப் பொறுப்பேற்க உள்ள முதல் பெண் மற்றும் ஆப்பிரிக்கக் கண்ட வம்சாவளியினைச் சேர்ந்த நபர் ஆவார்.
- வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) ஆனது, மிசோரமில் இருந்து சிங்கப்பூருக்கு முதன் முறையாக அந்தூரியம் பூக்களை ஏற்றுமதி செய்ய உதவியுள்ளது.
- இந்தியக் கடற்படையானது தவாஸ்யா எனப்படும் 1135.6 கூடுதல் வகைத் தொடர் சார் கப்பல்கள் திட்டத்தின் கீழான தன் இரண்டாவது போர்க் கப்பலினை அறிமுகப்படுத்தி உள்ளது.
    - இந்தத் தொடரில் முதல் கப்பலான திரிபுட் 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் படையில் இணைக்கப்பட்டது.
- உலகளாவிய வெளிப்பாட்டு ஊடகமாக கவிதை திகழ்வதன் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டும் வகையில் 2025 ஆம் ஆண்டு மார்ச் 21 ஆம் தேதியன்று உலக கவிதை தினம் கொண்டாடப் படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## பசுமைப் பள்ளித் திட்டம்



- நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள மூன்று அரசுப் பள்ளிகள் ஆனது, பசுமைப் பள்ளித் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- தமிழக அரசின் இந்த ஒரு முன்னெடுப்பானது, மாணவர் ஈடுபாடு மற்றும் நிலையான நடைமுறைகள் மூலம் பருவநிலை மாற்றத்தின் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டதாகும்.
- இந்தத் திட்டம் ஆனது, கட்டம் கட்டமாக/கட்டம் வாரியாக மாநிலம் முழுவதும் செயல் படுத்தப் படுகிறது என்ற ஒரு நிலையில் இந்த ஆண்டு முதல் முறையாக இத்திட்டத்தில் நாகப்பட்டினம் மாவட்டம் சேர்க்கப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று பள்ளிகள்

- திருக்குவளை அரசு மேல்நிலைப் பள்ளி, நாகப்பட்டினம் நகரம்
- அகரக்கடம்பனூர் அரசு மேல்நிலைப் பள்ளி, மற்றும்
- அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி, தோப்புத்துறை.

# தேசியச் செய்திகள்

## PFRDA விதிமுறைகள், 2025


| | Old Pension Scheme (OPS) | National Pension Scheme (NPS) | Unified Pension Scheme (UPS) |
|---|---|---|---|
| **Guaranteed pension** | Yes | No | Yes |
| **Pension amount** | 50% of last drawn basic pay + DA | Market-linked, depends on fund performance | 50% of average basic pay over the last 12 months |
| **Government contribution** | Not applicable | 14% of basic pay + DA | 18.5% of basic pay + DA |
| **Employee contribution** | Not applicable | 10% of basic pay + DA | 10% of basic pay + DA |
| **Inflation protection** | Yes | No | Yes |
| **Lump sum payment** | No | No | 1/10th of the monthly pay (basic + DA) for every 6 months of service completed |
| **Minimum pension*** | ₹9,000 | No | ₹10,000 |

- தேசிய ஓய்வூதிய முறையின் (NPS) கீழ், ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தினை (UPS) செயல்படுத்துவதற்கான சில விதிமுறைகளை ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (PFRDA) வெளியிட்டுள்ளது.
- PFRDA (NPS முறையின் கீழ் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தின் ஒரு செயலாக்கம்) விதிமுறைகள், 2025 ஆனது சமீபத்தில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.
- புதிதாக அறிவிக்கப்பட்ட இந்த விதிமுறைகள் ஆனது 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வர உள்ளது.
- UPS முறையில் இணைவதற்கான விருப்பத் தேர்வு ஆனது 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் மூன்று மாதங்களுக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- தேர்வு செய்தவுடன், ஒருவரின் முடிவு இறுதியானதாகக் கருதப்படும் என்ற நிலையில் அதன் பிறகு அந்த முடிவினை மாற்ற முடியாது.
- மத்திய அரசின் மூன்று வகையான ஊழியர்கள் இந்த UPS முறையின் கீழ் சேர தகுதி உடையவர்கள் என்று வழிகாட்டுதல்கள் குறிப்பிடுகின்றன:
  - 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி நிலவரப் படி பணியில் இருக்கும் மத்திய அரசு ஊழியர்கள்
  - ஏற்கனவே தேசிய ஓய்வூதிய முறையின் (NPS) கீழ் உள்ள ஊழியர்கள்.
  - 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி அல்லது அதற்குப் பிறகு மத்திய அரசின் பணிகளில் சேரும் புதிய ஊழியர்கள்.

## படிவம் 17C வெளியீடு - இந்தியத் தேர்தல் ஆணையம்

- அங்கீகரிக்கப்பட்ட வாக்காளர் வாக்குப்பதிவு தகவல்களை உடனடியாக வெளியிடக் கோரும் மனுதாரர்களுடன் தொடர்பு கொள்ள இந்தியத் தேர்தல் ஆணையம் (ECI) முன்வந்துள்ளது.
- 17C படிவத்தினை வெளியிட ECI மறுப்பதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடரப் பட்டது.

- 17C படிவம் என்பது ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் பதிவான வாக்குகளைப் பதிவு செய்யும் ஒரு முக்கியத் தேர்தல் ஆவணமாகும்.
- இதன் முதல் பகுதியில் (PART I) ஒரு வாக்குச் சாவடிக்கு ஒதுக்கப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை, பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள், வாக்களிக்காத சில வாக்காளர்கள் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவு செய்யப்பட்ட ஒட்டு மொத்த வாக்குகள் போன்ற விவரங்கள் உள்ளன.
- வேட்பாளர் வாரியான வாக்கு எண்ணிக்கையை உள்ளடக்கிய II பகுதியானது, தேர்தல் அதிகாரியால் சரி பார்க்கப்படுவதற்கு மிக முன்னதாக வாக்குச் சாவடி முகவர்களால் கையொப்பமிடப்படுகிறது.
- வாக்குச் சாவடி முகவர்கள், வாக்குச் சாவடிச் செயல்பாட்டின் முடிவில் 17C படிவத்தின் நகலைப் பெறுகிறார்கள், ஆனால் ECI வரலாற்றில் இதற்கு முன்னதாக அதனை இயங் கலையில் பொது மக்களின் பார்வைக்காக வழங்கியதில்லை.



[2][FORM 17C
[*See* rules 49S and 56C(*2*)]

PART I.—ACCOUNT OF VOTES RECORDED

**Election to House of the People/Legislative Assembly of the State/Union territory.......................................**
**from ..............................Constituency.**

Number and Name of Polling Station : ..........................................................................
Identification Number of voting machine used at the Polling Station :

control unit ..................................................................
balloting unit ..................................................................
Printer (if used) ..............................................................

1. Total number of electors assigned to the Polling Station
2. Total number of voters as entered in the Register for Voters (Form 17A)
3. Number of voters deciding not to record votes under rule 49-O
4. Number of voters not allowed to vote under rule 49M
5. Test votes recorded under rule 49MA (*d*) required to be deducted—


(a) total number of test votes to be deducted : Total No. ............... Sl. No.(s) of elector(s) in Form 17A ...............................

(b) candidates(s) for whom test vote(s) cast :

| Sl. No. | Name of candidate | No. of votes |
| --- | --- | --- |
| ........ | ................ | .......... |
| ........ | ................ | .......... |

1. Ins. by Notifin. No. S.O. 230(E), dated the 24th March, 1992.
2.Subs. by Notifin. No. S.O. 2470(E), dated the 14th August, 2013.

## நிதி ஆயோக் அமைப்பின் காசநோய் ஒழிப்பு இலக்கு – குஜராத்




- குஜராத் மாநிலமானது, நிதி ஆயோக் அமைப்பு நிர்ணயித்த 2024 ஆம் ஆண்டிற்கான காசநோய் பதிவு இலக்கில் சுமார் 95% இலக்கினையும், அதன் சிகிச்சை இலக்கில் 90%

இலக்கினையும் அடைந்துள்ளது.

- 2024 ஆம் ஆண்டில் 1,45,000 காசநோய் நோயாளிகளைக் கண்டறிந்து பதிவு செய்ய குஜராத்திற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டதோடு அந்த ஆண்டில் 1,37,929 நோயாளிகள் கண்டறியப்பட்டு பதிவு செய்யப் பட்டது.
- இந்தக் காலக் கட்டத்தில் 1,31,501 நோயாளிகள் காசநோய்க்கான சிகிச்சையினைப் பெற்றனர்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## FireSat முன்னெடுப்பு




- காட்டுத்தீ அதிகரிப்பதற்கு முன்னதாக அவற்றைக் கண்டறிந்து நன்கு தடுப்பதற்காக என்று செயற்கைக் கோள்களைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட கூகுள் நிறுவனத்தின் ஆதரவு பெற்ற இந்த முன்னெடுப்பானது அதன் இலக்கை நோக்கி ஒரு படி முன்னேறியுள்ளது.
- FireSat திட்டத்தின் முதல் செயற்கைக்கோள் ஆனது புவித் தாழ்மட்ட சுற்றுப்பாதையில் (LEO) வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது.
- இந்த செயற்கைக்கோளானது இத்தகைய முதன் முதல் வகையான தொகுப்பில் உள்ள 50க்கும் மேற்பட்டவற்றில் முதன்மையானதாகும்.
- ஒரு வகுப்பறை அளவிலான (தோராயமாக 5×5 மீட்டர்) சிறிய காட்டுத் தீயைக் கூட கண்டறிந்து கண்காணிக்க செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்தும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஜார்ஜ் VI பனிப் படலம் - பன்னிரண்டு வகையான புதிய இனங்கள்


- ஜார்ஜ் VI பனிப் படலத்தில் இருந்து பிரிந்த A-84 பனிப்பாறையால் புதிதாக வெளிப் படும் கடற்பரப்பில் பன்னிரண்டு வகையான மிகப் புதிய உயிரினங்களை அறிவியல் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்தப் புதிய இனங்களில் இராட்சதக் கடல் சிலந்திகள், பேய்க் கணவாய் /ஆக்டோபி மற்றும் பவளப் பாறைகள் அடங்கும்.

- அவர்கள் சுபாஸ்டியன் எனப்படுகின்ற தொலைதூரக் கட்டுப்பாட்டு அமைப்பு மூலம் இயக்கப் படும் வாகனத்தினைப் (ROV) பயன்படுத்தி கடலின் அடிப்பகுதியை மிக நன்கு ஆராய்ந்து, 1,300 மீட்டர் ஆழத்தில் மிகவும் வளம் மிக்க சுற்றுச்சூழல் அமைப்புகளைக் கண்டறிந்துள்ளனர்.



# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## ஐக்கிய நாடுகள் சபையின் உலக நீர் மேம்பாட்டு அறிக்கை 2025




- 'Mountains and Glaciers; Water Towers' எனப்படும் 2025 ஆம் ஆண்டு உலக நீர் மேம்பாட்டு அறிக்கையானது யுனெஸ்கோ அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ளது.
- ஆசிய-பசிபிக் பகுதியானது, உலகின் மிக உயரமான மலைகள் மற்றும் பரந்து விரிந்த பனிப்பாறை அமைப்புகளுக்கு முக்கியத் தாயகமாக உள்ளது, மேலும் இது பருவநிலை மாற்றத்தினால் அதிகளவில் பாதிக்கப்படக் கூடிய ஒன்றாக உள்ளது.
- உருகும் பனிப்பாறைகள் ஆனது, உலகெங்கிலும் உள்ள 2 பில்லியன் மக்களின் உணவு மற்றும் நீர் விநியோகத்தில் அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன.
- இந்து குஷ் இமயமலை (HKH) பகுதியானது கடும் பருவநிலை மாற்றத்தால் மிகப்பெரிய அளவு இழப்புகளை எதிர் கொள்கிறது என்பதோடு, இது முந்தைய தசாப்தத்தை விட 2011-2020 ஆம் ஆண்டுகளில் 65 சதவீதம் வேகமாக உருகியது.

- 1.5°C மற்றும் 4°C வெப்பநிலைக்கு இடையில் அதிகரித்தால், உலகளவில் உள்ள மலை சார்ந்தப் பனிப்பாறைகள் 2015 ஆம் ஆண்டில் இருந்த நிலைகளுடன் ஒப்பிடும் போது 2100 ஆம் ஆண்டில் அவற்றின் மொத்த நிறைவில் சுமார் 26 முதல் 41 சதவீதம் வரையில் இழக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## நீதிபதி யஷ்வந்த் வர்மா

- இந்தியத் தலைமை நீதிபதி (CJI) சஞ்சீவ் கன்னா, டெல்லி உயர் நீதிமன்ற நீதிபதியான யஷ்வந்த் வர்மாவின் நடத்தை குறித்த மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஒரு உள்ளக விசாரணையைத் தொடங்கினார்.
- இதற்கிடையில், அந்த நீதிபதி வர்மாவின் நீதித்துறைப் பணிகள் ரத்து செய்யப்பட்டு உள்ளன /திரும்பப் பெறப்பட்டுள்ளன.
- நீதித்துறையின் கீழ் உள் விசாரணையானது, அரசியலமைப்பின் கீழான பதவி நீக்க நடவடிக்கையிலிருந்து வேறுபட்ட ஒரு செயல்முறையைப் பின்பற்றுகிறது.
- ஒரு நீதிபதிக்கு எதிரான புகார் ஆனது இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்களால் அல்லது அவர்களிடம் மட்டுமே முன் வைக்கப்பட வேண்டிய அவசியமில்லை.
- ஒரு நீதிபதிக்கு எதிரான புகாரை விசாரிக்க இந்தியத் தலைமை நீதிபதி அல்லது ஒரு உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியையும் அழைக்கலாம்.
- விசாரணை முடிந்ததும், அந்தக் குழுவானது தனது அறிக்கையை இந்தியத் தலைமை நீதிபதியிடம் சமர்ப்பிக்கும்.
- அக்குற்றச்சாட்டுகள் ஆனது பதவி நீக்க நடவடிக்கைகளைத் தொடங்கும் அளவுக்கு தீவிரமானவை என்று குழு முடிவு செய்தால், சம்பந்தப்பட்ட நீதிபதியைத் தானாக முன் வந்து இராஜினாமா செய்ய அல்லது ஓய்வு பெற என்று இந்தியத் தலைமை நீதிபதி அறிவுறுத்துவார்.
- அந்த நீதிபதி இராஜினாமா செய்யவோ அல்லது ஓய்வு பெறவோ வழங்கப்பட்ட இந்தியத் தலைமை நீதிபதியின் ஒரு அறிவுரையை ஏற்க மறுத்தால், பணியகற்றும் நடவடிக்கைகள் தொடங்கப்பட வேண்டும் என்ற அந்தக் குழுவின் முடிவை இந்தியத் தலைமை நீதிபதி குடியரசுத் தலைவர் மற்றும் பிரதமருக்கு தெரிவிப்பார்.





## ஸ்டாக்ஹோம் நீர் பரிசு 2025

- ஆஸ்திரியா நாட்டின் நீர்ப் பொறியியலின் முன்னோடியான நீரியல் நிபுணர் குண்டர்

ப்ளோஷ்லுக்கு மதிப்புமிக்க ஸ்டாக்ஹோம் நீர் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

- வெள்ளம் மற்றும் பருவநிலை மாற்றத்துடனான அவற்றின் தொடர்பைப் பற்றிய ஒரு புரிதலை அவரது பணி மாற்றியுள்ளது.
- இது சுவீடன் நாட்டு அரசு அறிவியல் கழகத்துடன் / ராயல் ஸ்வீடிஷ் அகாடமி ஆஃப் சயின்ஸ் நிறுவனத்துடன் இணைந்து ஸ்டாக்ஹோம் நீர் அறக்கட்டளையால் வழங்கப் படுகிறது.




## ஆரோக்கியமான நகரங்களுக்கான கூட்டாண்மை உச்சி மாநாடு – 2025




- இந்த உச்சி மாநாட்டினை ப்ளூம்பெர்க் தொண்டு நிறுவனம், உலக சுகாதார அமைப்பு (WHO), வைட்டல் ஸ்ட்ராட்டஜிஸ் மற்றும் சிட்டி ஆஃப் பாரிஸ் ஆகியவை இணைந்து நடத்துகின்றன.
- ஆரோக்கியமான நகரங்களுக்கான ஒரு கூட்டாண்மை என்பது தொற்றாத நோய்கள் மற்றும் காயங்களைத் தடுக்க என்று செயல்படும் 74 நகரங்களின் உலகளாவிய வலை அமைப்பாகும்.
- இந்த ஆண்டு, தொற்றாத நோய்கள் (NCDs) மற்றும் காயங்களைத் தடுப்பதில் சாதனை

படைத்ததற்காக, கோர்டோபா (அர்ஜென்டினா), ஃபோர்டலேசா (பிரேசில்) மற்றும் மான்செஸ்டர் (ஐக்கியப் பேரரசு) ஆகியவற்றிற்கு உலக சுகாதார அமைப்பினால் இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச இன பாகுபாடு ஒழிப்பு தினம் - மார்ச் 21

- தென்னாப்பிரிக்காவில் நடந்த துயரகரமான ஷார்ப்வில் படுகொலையின் நினைவாக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- 1960 ஆம் ஆண்டு அன்று, இனவெறி "அனுமதிச் சீட்டு சட்டங்களுக்கு" எதிரான மிகவும் அமைதியான ஆர்ப்பாட்டத்தில் போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தி சுமார் 69 பேரைக் கொன்றனர்.
- 2025 ஆம் ஆண்டானது அனைத்து வகையான இனப் பாகுபாடு ஒழிப்புக்கான சர்வதேச உடன்படிக்கையின் (ICERD) 60 வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- இந்த முக்கிய உடன்படிக்கை ஆனது 1965 ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.




## உலக தண்ணீர் தினம் - மார்ச் 22




- இது உலகெங்கிலும் உள்ள நீர் வளங்களின் முக்கிய நிலை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது மற்றும் நீர் தொடர்பான முக்கிய அவசரப் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க ஊக்குவிக்கிறது.

- "Glacier Preservation" என்பது 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துருவாகும்.
- பனிப்பாறைகள் மற்றும் பனிப்படலங்கள் உலகின் நன்னீரில் தோராயமாக சுமார் 70% நீரினைக் கொண்டுள்ளன என்பதோடு இது உலகளாவிய நீர் நுகர்வு மற்றும் அதன் பாதுகாப்பிற்கு இன்றியமையாததாக அமைகிறது.

## உலக காசநோய் (TB) தினம் - மார்ச் 24

- காசநோயை ஒழிப்பதன் அவசியம் குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 24 ஆம் தேதியன்று உலக காசநோய் (TB) தினம் அனுசரிக்கப் படுகிறது.
- 1882 ஆம் ஆண்டு டாக்டர் ராபர்ட் கோச் காசநோயை உண்டாக்கும் பாக்டீரியாவைக் கண்டறிந்ததை இந்த நாள் குறிக்கிறது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Yes! We Can End TB: Commit, Invest, Deliver" என்பதாகும்.
- 2025 ஆம் ஆண்டிற்குள் காசநோயை ஒழிப்பதற்கான இந்தியாவின் இலக்கு உலகின் மிகவும் இலட்சிய மிகு சுகாதாரத் திட்டங்களில் ஒன்றாகும்.
- தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின் (NTEP) கீழ், இந்தியாவானது மிக மேம்பட்ட நோயறிதல்களுடன் அதன் காசநோய் எதிர்ப்பு நடவடிக்கைகளை நன்கு வலுப்படுத்தி உள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★